# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101946

1. District : மாவட்டம் Dindigul — PS: காவல்நிலையம் V & AC — Year: ஆண்டு 2022 — FIR No.: மு.த.அ. எண் 5/2022 — Date: நாள் 27.09.2022
2. (i) Act சட்டம்: The Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended in 2018. — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை After three days from 12.08.2022, 26-09-2022
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை at 14.00 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27-09-22 — Time நேரம் : 09.20 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27-09-22 — Time நேரம் : 10.30 hrs.
4. Type of Information : Written/ Oral : ✓ (Written)
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 13 km தென்மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி கட்டடவியல் துறை, அண்ணா யுனிவர்சிட்டி கல்லூரி, திண்டுக்கல்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. ஜெயகோபால்சிங் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மயிலன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் — (g) Address : முகவரி சித்தியனாரயபுரம், பள்ளபட்டி, தேனி மாவட்டம்.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ரமேஷ் பாண்டியன், உதவி பேராசிரியர், கட்டடவியல் துறை, அண்ணா யுனிவர்சிட்டி கல்லூரி, திண்டுக்கல்
8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

DSP/VACB/DGL
27/09/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

27.09.2022 – 11.30 Hrs.

Name: பெயர் மு. நாகராஜன்,
Rank: நிலை .....................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ல.ஒ.த.பி. பிரிவு, திண்டுக்கல்.

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:5/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12, FIR Contents:-

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 27.09.2022-ம் தேதி காலை 09.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது தேனி, பள்ளபட்டி, சத்தியநாதபுரத்தைச் சேர்ந்த திரு,மயிலன் மகன் M.பெருமாள்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை நான் 27.09.2022ம் தேதி காலை 09.20 மணிக்கு பெற்று காலை 10.30 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: அனுப்புநர் M.பெருமாள்சாமி, S/o.திரு.மயிலன், சத்தியநாதபுரம், பள்ளபட்டி, தேனி. பெறுநர். உயர்திரு.DSP அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக குன்னூர் கிராமம் சர்வே எண் 773/1B, 2Aல் 2.76 ஏக்கர் புஞ்சை நிலமும், 754/1, 755/2, 759/2, 757/2Aல் 40 செண்ட் நஞ்சை நிலமும் உள்ளது. என்னுடைய விவசாய நிலத்தில் சர்வே எண் 773/1B, 2Aவில் உள்ள நிலத்திற்கு சர்வே எண் 754/1, 755/2, 759/2, 757/2Aல் இருந்து மண் எடுக்க அனுமதி வழங்குமாறு கடந்த 04.07.2022ம் தேதி ஆண்டிபட்டியில் உள்ள வேளாண் அதிகாரிக்கு விண்ணப்பம் கொடுத்தேன். பின்பு 02.08.2022ம் தேதி வேளாண்மை உதவி இயக்குநர், ஆண்டிபட்டி அவர்களை நான் சந்தித்த போது அவர் என்னுடைய நிலத்தில் இருந்து மண் எடுப்பதற்கு அனுமதி கிடையாது என்றும் அதனால் அருகில் உள்ள குளத்தில் இருந்து மண் எடுப்பதற்கு பரிந்துரை செய்து தருவதாக கூறி கடிதம் ஒன்றை என்னிடம் கொடுத்தார். நான் அந்த கடிதத்தை பெற்று அன்றைய தினமே மைன்ஸ் அலுவலகம் சென்று AD மைன்ஸ் அவர்களை சந்தித்தேன். அவர் அந்த அலுவலகத்தில் இருந்த RI அவர்களிடம் விபரங்களை கேட்டு தெரிந்து கொள்ளுமாறு கூறினார். நான் RI யிடம் விசாரித்த போது அவர் வேளாண்துறையிடம் இருந்து பரிந்துரை எதுவும் தேவையில்லை, நீங்கள் உங்களுடைய நிலத்திற்கும் அதன் அருகில் உள்ள குளத்திற்கும் VAO விடம் சான்று மற்றும் அடங்கல் வாங்கி வருமாறு கூறினார். நான் 12.08.2022 ம் தேதி குன்னூர் கிராம VAO விடம் விபரங்களை சொல்லி சான்றிதழ் கேட்டேன், அவரும் என்னுடைய நிலத்திற்கும், செங்குளம்-கருங்குளம் குளத்திற்கும் சான்று, A ரிஜிஸ்டர், FMB

Sketch, அடங்கல் ஆகியவற்றை கொடுத்தார். நான் அவற்றை பெற்று மீண்டும் மைன்ஸ் ஆபிஸ் சென்று RI ஐ சந்தித்து கொடுத்தேன். அப்போது அவர் மேற்படி குளத்தில் இருந்து நான்கு இடங்களில் மண் எடுத்து திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அண்ணா யூனிவர்சிட்டி கல்லூரியில் பரிசோதனை செய்து சான்று வாங்கி கொடுக்க வேண்டும் என்றும் மேலும் பொதுப்பணித்துறையிலும் அனுமதி பெற்று கொடுத்தால் மண் எடுப்பதற்கு நாங்கள் அனுமதி கொடுப்போம் என்று கூறினார். மேலும் விபரங்களுக்கு இதே மாதிரி சான்றிதழ் வாங்கிய சின்னமனூரை சேர்ந்த திரு.முருகன் என்பவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று கூறி அவருடைய அலைபேசி எண்ணை கொடுத்தார். நான் அவரிடம் பேசிய போது அண்ணா யூனிவர்சிட்டி கல்லூரியில் மண் பரிசோதனை செய்பவர் உதவி பேராசிரியர் திரு.ரமேஷ்பாண்டியன் என்பவரின் அலைபேசி எண்ணை கொடுத்து அவரிடம் பேசிக்கொள்ளுமாறு சொன்னார். நான் மூன்று நாட்கள் கழித்து திரு.ரமேஷ்பாண்டியன் என்பவரிடம் என்னுடைய செல்போன் எண் 8438505224 லிருந்து அவருடைய செல்போன் எண் 9087775040 க்கு பேசினேன். அப்போது அவர் மேற்படி குளத்தில் நான்கு இடங்களில் ஒன்னரை அடிக்கு கீழ் இருக்கும் மண்ணை சுமார் ஒன்னரை கிலோ எடுத்து வருமாறு கூறினார். மேலும் மண் பரிசோதனை செய்வதற்கு ரூபாய்.20,000/- செலவாகும் என்று சொன்னார். நான் அவரிடம் எதற்காக ரூ.20,000/- செலவாகும் என்று கேட்டேன். அதற்கு அவர் மண்பரிசோதனை செய்வதற்கு ஆகும் கட்டணம் என்று கூறினார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லாததால் நான் ஒரு மாத காலமாக அவரை தொடர்பு கொள்ளவில்லை. பின்னர் கடந்த 24.09.2022 ம் தேதி காலை நான் அவரை தொடர்பு கொண்டு எந்த இடத்திற்கு வரவேண்டும் என்று கேட்டேன், அதற்கு அவர் திண்டுக்கல் அண்ணா யூனிவர்சிட்டிக்கு வாருங்கள் என்று சொன்னார். அன்றைய தினமே குளத்தில் நான்கு இடங்களில் இருந்து சுமார் ஒன்னரை கிலோ மண்ணை எடுத்து வீட்டில் வைத்திருந்தேன். பின்பு 26.09.2022-ம் தேதி மதியம் சுமார் 1.55 மணிக்கு நான் என்னுடைய மச்சினன் இளையராஜாவை அழைத்து கொண்டு அண்ணா யூனிவர்சிட்டி கல்லூரிக்கு சென்றேன். அப்போது மீண்டும் திரு.ரமேஷ்பாண்டியன் அவர்களை தொடர்பு கொண்டு நான் வந்த விபரத்தை கூறினேன். அவர் சிவில் டிபார்ட்மென்ட்க்கு வருமாறு கூறினார். அங்கிருந்த செக்யூரிட்டியிடம் வழி கேட்டு கல்லூரியின் நுழைவு வாயிலுக்கு சென்ற போது அங்கு

திரு.ரமேஷ்பாண்டியன் நின்றிருந்தார். எங்கள் இருவரையும் அவருடைய அலுவலகத்திற்கு அழைத்து சென்று ஒரு விண்ணப்பம் எழுதி கொடுக்குமாறு சொன்னார். எனக்கு அவ்வளவாக எழுத படிக்க தெரியாததால் என்னுடைய மச்சானிடம் விண்ணப்பம் எழுத சொன்னேன். அப்போது திரு.ரமேஷ்பாண்டியன் சொல்ல சொல்ல என்னுடைய மச்சான் விண்ணப்பம் எழுதினார். நான் அதில் கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். பின்பு திரு.ரமேஷ்பாண்டியன் என்னிடம் ரூபாய்.20,000/- பணம் வேண்டும் என்று கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் இந்தப்பணம் மண்பரிசோதனைக்காக கட்ட வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் உங்களுக்கு மண்பரிசோதனை செய்து சான்று பெற்று கொடுக்க ஏற்பாடு செய்வதற்கு எனக்கு கொடுக்க வேண்டிய பணம் என்று சொன்னார். நான் அந்த பணத்திற்கு ரசீது கொடுப்பீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர் ரசீது எல்லாம் கொடுக்க மாட்டேன் பொதுவாக ரூ.30,000/- வரை வாங்குவேன் நீங்கள் விவசாயம் செய்வதற்காக என்று சொன்னதால் ரூ.20,000/- கேட்கிறேன் என்று சொன்னார். நான் அவரிடம் கொஞ்சம் குறைக்க முடியாதா கடன் வாங்கி தான் இந்தப்பணத்தை கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி ரூ.5,000/- குறைத்து கொண்டு ரூ.15,000/- கொடுக்க வேண்டும் என்று கறாராக கூறினார். மேலும் மண் பரிசோதனை சான்றிதழை உடனே பெற்றுத்தருகிறேன் என்றும் நாளை காலை கல்லூரியில் அவருடைய அலுவலகத்தில் வந்து பணத்தை கொடுக்குமாறு கூறினார். நான் வீட்டிற்கு சென்று யோசனை செய்ததில் விவசாயம் செய்வதற்காக மண் பரிசோதனை செய்வதற்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் ரூ.15,000/- லஞ்சமாக கேட்ட திரு.ரமேஷ்பாண்டியன், உதவி பேராசிரியர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகார் கொடுக்கிறேன். இந்த புகாருடன் நான் வேளாண்மை உதவி இயக்குநர், ஆண்டிபட்டி அவர்களுக்கு கொடுத்த விண்ணப்பம், வேளாண்மை உதவி இயக்குநர், ஆண்டிபட்டி அவர்கள் உதவி இயக்குநர், புவியியல் மற்றும் கனிமவளத்துறை, தேனி அவர்களுக்கு அனுப்பிய பரிந்துரை கடிதம், நான் VAO விடம் பெற்ற சான்றுகள் ஆகியவற்றை இந்த புகாருடன் இணைத்துள்ளேன். மேலும் திரு.ரமேஷ்பாண்டியன் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.15,000/- கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை

எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- xxxx (M.பெருமாள்சாமி) சாட்சி Sd/- xxxx (E.Ilayaraja, 27-09-2022)

Sir, Received the complaint on 27.09.2022 at 09.20 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused is found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.05/2022, u/s. 7(a) of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 27.09.2022 at 10.30 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Nagarajan, Deputy Superintendent of Police, V&AC, Dindigul 27.09.2022)

Original FIR along with written complaint of Tr.M.Perumalsamy, S/o.Mayilan, Sathiyanathapuram, Pallapatti, Theni and with the relevant documents are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

27/09/2022

(J.Nagarajan)
Dy.Supdt. of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.